**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் அறிவுறுத்தல்களுக்கமைய இணங்கி ஒழுகுதல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | சபையின் நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் போது அவற்றை சமர்ப்பிக்கும் போதும் வெளிப்படுத்தப்படவேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் |

வெளிப்படுத்தப்பட்டு சீர் செய்யப்படும்.

**(இ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபையின் 05 சொத்துக்கள் பௌதீக ரீதியாக இல்லாத போதும் வருட இறுதியில் சொத்துக்களின் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டமையால் 31 திசெம்பர் 2018 இல் உள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,794,960 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | பௌதீக ரீதியில் காணப்படும் பொருட்களே நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும் | குறித்த 05 சொத்துக்களையும் பதிவழிப்பதற்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டிருந்தும் இவ்வறிக்கைத் திகதி வரை அனுமதி கிடைக்கப்பெறவில்லை |
| (ii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 278,265 பெறுமதியான திரைச்சீலை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்படாமையினால் சொத்துக்கள் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது. | நிலையான சொத்துகள் அனைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | திரைச்சீலையின் பாவனைக்காலம் குறுகியது எனக் கருதப்பட்டு குறிப்பிட்ட பெறுமதியானது சொத்துக் கணக்கில் சேர்க்கப்படவில்லை |
| (iii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 174,155 பெறுமதியான ஒலிபெருக்கி தொகுதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 170,905 ஆக கொண்டு வரப்பட்டமையினால் சொத்துக்கள் குறைவாக கணக்கிடப்பட்டுள்ளது. | சொத்துகளின் பெறுமதி முழுமையாக நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டும். | ஒலிபெருக்கி தொகுதியின் பெறுமதி ரூபா 174,155 ஆக உள்ளபோதும் தொகுதியில் காணப்பட்ட இணைப்பு வயர்களின் பெறுமதி ரூபா 3,250 ஆக காணப்பட்டமையால் இப்பெறுமதி குறைக்கப்பட்ட ரூபா 170,905 நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 175,584,630 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்குரிய காணி உரிமைப் பத்திரம், நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிலையான வைப்புச்சான்றிதழ் போன்ற | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்று உறுதி செய்ய முடியாதிருந்தது.

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாகம் விதிக்கோவையின் அத்தியாயம் - 60 | வருட ஆரம்பத்தின் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களின் விபரம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படல் வேண்டும் | 2019 ஆம் வருடத்தின் ஆரம்பத்தில் தொழில் நிறுவனங்களின் விபரம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விபரங்கள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. |
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) நிதி ஒழுங்குவிதி இலக்கம் 237 | சபையினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,785,720 பெறுமதியான கொடுப்பனவுகளுக்கு சபையால் திருப்திகரமாக உள்ளது என உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் இணைக்கப்படவில்லை. | நிதி பிரமாணங்களுக் கமைய செயற்படல் வேண்டும் | தவறுதலாக இச்சான்றிதழ்கள் பெறப்பட்டு இணைக்கப்படவில்லை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளுக்கு இச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டு இணைக்கப்படும். |
| | (ii) நிதி ஒழுங்குவிதி இலக்கம் 371(5) | கூட்டுமொத்தம் ரூபா 251,554 பெறுமதியான 06 முற்பணம் தொடர்பில் கடந்த இரு வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களுக் கமைய செயற்படல் வேண்டும் | முற்பணக்கணக்கில் ரூபா 22,277 பதிவழிப்பதற்கும் எஞ்சிய தொகையை சீர் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஈ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல் | | | |
| | (i) பிரிவு 178 (3) | திறமையான ஒப்பந்த வேலைகளை முன்னெடுத்திருக்கும் சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக்கமைய செயற்படல் வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| **(உ)** | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்று நிருபம் | மீளாய்வாண்டில் சபையின் 19 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும் | தற்போது வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு 2019.04.05 இல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **(ஊ)** | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை | சபையின் அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும் | சபையினது காணி கட்டடங்களுக்குரிய தனித்தனி கோவைகள் பேணப்பட்டு தொடர்பான ஆவணங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன |

### 1.4.2 வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 இன் 5:4:12 இன் பிரகாரம் பண்டங்கள் அல்லது கட்டுமான வேலைகள் மீதான பெறுமதி சேர் வரியானது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். 12 வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ரூபா | பெறுமதி சேர் வரி மற்றும் பெறுகை வழிகாட்டி நெறிகள் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் தங்களுக்குப் பிரதி அனுப்புவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

2,827,629 பெறுமதியான சேர் பெறுமதி வரி தொடர்பான கொடுப்பனவுகள் தொடர்பில் நாளது வரைக்கும் கணக்காய்விற்கு அறியப்படுத்தியிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,392,468 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,252,868 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 3,500,000 | 32,749,905 | 3,499,360 | 1,883,898 | 3,500,000 | 3,295,230 | 2,379,703 | 2,140,602 |
| வாடகைகள் | 3,007,300 | 3,007,300 | 23,066,125 | 10,103 | 3,161,554 | 3,161,544 | 2,929,684 | 655,740 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,160,000 | 2,160,000 | 2,305,730 | -- | 2,240,000 | 2,240,000 | 1,868,810 | - |
| ஏனைய வருமானம் | 62,913,716 | 62,913,716 | 45,192,887 | 20,944,685 | 57,387,292 | 15,002,000 | 29,746,385 | - |
| **மொத்தம்** | **71,581,016** | **100,830,921** | **74,064,102** | **22,838,686** | **66,288,846** | **23,698,774** | **36,924,582** | **2,796,342** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 145,730 தொடக்கம் ரூபா 7,044,293 வரையான வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பாதீட்டு சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | கடந்த 29 ஆண்டுகளுக்கு மேலாக சபையினால் பெறப்படவேண்டிய ஆயுள்வேத நன்கொடையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவரும் ரூபா 38,280 தொடர்பில் அதற்குரிய காரணங்கள் கணக்காய்வுக்கு உரியவாறு கிடைத்திருக்கவில்லையாதலால் அதனை திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது | ஆயுள்வேத நன்கொடை நிலுவைகளினை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 2.2.3 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதங்கள் மற்றும் ஆதன வரி நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 1,883,898 இனை அறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதங்கள் மற்றும் ஆதன வரி நிலுவைகள் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | வரி நிலுவைகளை அறவிடும் பொருட்டு நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டுள்ளன. |

### 2.2.4 அனுமதிப்பத்திர கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் ஏடுகளையும் ஆவணங்களையும் கணக்காய்வு செய்த போது 1397 நிறுவனங்களுக்கு | அனைத்து நிறுவனங்களிற்கு வியாபார அனுமதிப்பத்திரம் | பெற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களை மீள சமர்ப்பிக்காமை, காணி ஆவணம் மற்றும் கட்டட அனுமதி தொடர்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை, |

| | | |
|---|---|---|
| வியாபார அனுமதிப்பத்திர கட்டணங்கள் வசூலிக்கப்பட்டிருந்தது. எனினும் 1354 நிறுவனங்களுக்கு வியாபார உரிமம் வழங்கப்படவில்லை | வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பொது சுகாதார பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்படி குறிப்பிட்ட விண்ணப்பதாரிக்கு அறிவித்த போதும் நிவர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மீள் பரிசோதனைக்காக சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் வியாபார உரிமம் வழங்கப்படவில்லை. |

### 2.2.5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ஜே.சி.பி, மோட்டார் கிரேடர் மற்றும் மோட்டார் றோலர் என்பவற்றினை வாடகைக்கு கொடுத்தமை தொடர்பில் 12 வகையான அறவிடப்பட வேண்டியிருந்த வருமான நிலுவை ரூபா 586,193 இனை கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளுக்கு மேலாக அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான நிலுவைகளை அறவீடு செய்வதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 2.2.6 நீதிமன்றதண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,684,882 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் நீதிமன்ற தண்டப்பணம் பெறப்படல் வேண்டும் | நிலுவையாக உள்ளவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

(ஆ) முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,223,010 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டும் | தற்போது முத்திரைக் கட்டணங்கள் முழுவதும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், சுகாதாரம்,பொதுப் பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 02 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | எமது சபையின் வருமான எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அறவிடப்படும் வருமானங்கள் அனைத்திற்கும் உபவிதிகள் ஆக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு வருமானங்கள் அறவிடப்பட்டு வருகின்றன. |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 17 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

**(இ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 26,015,663 பெறுமதியான 09 செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள் காணப்பட்டன. | உரிய காலத்தில் செயற்பாடுகள் முடிவுறுத்தப்படல் வேண்டும் | ஒப்பந்த காலத்தில் எமது பிரதேசத்தில் நிலவிய மழையுடனான காலநிலை காரணமாக தாமதங்கள் ஏற்பட்டதுடன் குறித்த காலப்பகுதிக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. |

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். | இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |
| (ii) | சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை | சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்த வேண்டும். | இவ்வருடத்திலிருந்து இந்நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்படும் |
| (iii) | குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை. | குப்பைகள் வகைப்படுத்தி சேகரிக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு உரிய முறை சுழற்சிக்கு உட்படுத்தப்படும் |
| (iv) | சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டு வரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படவில்லை | குப்பைகளை வகைப்படுத்துவதற்துவதற் கான வேலைத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். | குறுகிய காலத்தில் அப்பொறிமுறையை ஏற்படுத்தப்படும். |
| (v) | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்படும் |
| (vi) | கழிவு முகாமைத்துவத்திற்குத் | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தரவுகள் | எதிர்காலத்தில் தரவு முறைமை பேணுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்படவில்லை. | மற்றம் தகவல்கள் முறைப்படுத்தப்படல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும் |
| (vii) | திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்படுகின்றது. | திண்மக்கழிவுகள் மீள் சுழற்சிக்குட்படுத்தபடல் வேண்டும். | மாற்றீடான திட்டமொன்று விரைந்து எடுக்கப்படும். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சபையானது எவ்வித தயார்நிலைப்படுத்தலையும் மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்க மைய செயற்படல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டு உள்ளுராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட ரூபா 147,637 பெறுமதியுடைய 02 போட்டோ பிரதி இயந்திரம் இதுவரை பாவனையில் ஈடுபடுத்தப்படாமல் உள்ளது. | பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு போட்டோ பிரதி இயந்திரங்களும் பாவனைக்கு உட்படுத்தமுடியாமல் உள்ளமையால் அவற்றை ஏலவிற்பனை செய்வதற்கு 2018 ஆம் ஆண்டு வருடாந்த கணக்கெடுப்பு சபை சிபார்சு செய்துள்ளது |
| (ஆ) | சபையால் மீளாய்வாண்டுக்கான K படிவம் கூட்டுமொத்தம் ரூபா 92,690 அச்சிட மற்றும் வழங்குவதற்கு செலவளிக்கப்பட்டிருந்த போதும் குறித்த படிவங்களை விநியோகிக்கும் | படிவங்களை முழுமையாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆதன உரிமையாளர்களினால் அலுவலகத்தில் படிவத்தினைப் பெற்று உடன் ஆதன வரி செலுத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோத்தர்கள் 1512 படிவங்கள் விநியோகிக்கப்படாமல் சபையில் தேங்கி காணப்பட்டது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | | வருகின்றது |
| (இ) | சில்லறை கடன் கொடுத்தோர் கணக்கில் 2016 ஆண்டிற்கு செலுத்த வேண்டி காணப்படும் 02 சில்லறை கடன் கொடுத்தோர் ரூபா 145,111 கொடுப்பனவுகள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக செலுத்தப்படாமல் தொடர்ந்தும் கணக்குகளில் செலுத்தப்பட வேண்டியதாக காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாளதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | சில்லறை கடன் கொடுத்தோர் நிலுவையினை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ரூபா 72,750 தொகையான சில்லறை கடன் கொடுத்தோர் இம்மாத இறுதிக்குள் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஈ) | 20 கடன் கொடுத்தோருக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபா 34,132,790 தொகையினை 31 திசெம்பர் 2018 வரை செலுத்தி தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கடன் கொடுத்தோருக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைகள் செலுத்தி தீர்க்கப்பட வேண்டும் | மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி கிடைக்கப்பெற்றதும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) பதவி வெற்றிடங்கள்** | | |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 07 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்பபடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இரண்டாம் தரத்திற்கான 02 வெற்றிடங்களும் பிரதிப் பிரதம செயலாளர் செயலகத்தினால் நிரப்பப்பட வேண்டியவை ஆகும். மற்றும் ஆரம்ப தரத்திற்கான அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கான 05 வெற்றிடங்களும் சபையினால் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

**(ஆ) ஊழியர் பிணைகள்**

| | | |
|---|---|---|
| 03 உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக சபையில் இருந்து விலகிய போதும் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ள ஊழியர் பிணை வைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 12,500 இனை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிணைப்பணம் மீளளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்ட பிணை வைப்புகளை இவ்வாண்டில் மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த 11 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரியினை அறவிடப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரியினை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 02 கடை 1987 ஆண்டு தொடக்கம் நாளதுவரை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை காரணமாக சபைக்கு ரூபா 302,400 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களால் நாளதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தின்படி செயற்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | அடுத்து வரும் ஆண்டுகளில் ஒருவருட காலத்திற்கு ஒப்பந்தம் மட்டுப்படுத்தப்பட்டு கேள்வி கோரல் மேற்கொண்டு கடையை வாடகைக்கு விடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது |
| (இ) | சபையால் 2013 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிகளில் 2137 கட்டிட அனுமதிகள் வழங்கப்பட்டிருந்த போதும் 123 தரப்பினர்களுக்கு மாத்திரமே வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது 2014 தரப்பினர்களுக்கு வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் | வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | குடிபுகுதல் சான்றிதழ் கோரி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் குடிபுகுதல் சான்றிதழ் வழங்க முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | நாளதுவரை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | | |
| (ஈ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 49 ஆம் பிரிவிற்கமைய இரண்டு கட்டடங்களில் வியாபார செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற போதும் பிரதேசசபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல் களுக்கு அமைய செயற்படல் வேண்டும | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபையின் 02 வாகனங்கள் பாவனையிற்குட்படுத்துவதற்கு நாளாதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தி பாவனையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

#### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 61 காணிகளின் உரிமையானது சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரிமையானது சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த 12 வாகனங்கள் சபைக்கு உரித்தானதாக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்கள் உரிமை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 3.5.3 குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் விளையாட்டு மைதான நுழைவாயிலில் பெயர்ப்பலகை அமைத்தல் வேலையானது ரூபா 577,095 செலவில் 09 மார்ச் 2015 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும். மைதான உரிமையானது சபைக்கு உரியதாக இல்லாத காரணத்தால் இவ்வறிக்கைத் திகதி வரை மைதானத்தை பாவனையிலீடுபடுத்தபடவில்லை அத்துடன் அதன் உரிமை மாற்றம் தொடர்பாக நாளதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விளையாட்டு மைதானத்தினை சபைக்கு உரிமையாக்கி பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |
| (ஆ) | மீள்குடியேற்ற அமைச்சின் அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் சபையால் மேற்கொள்ளப்பட்ட குழாய் நீர் விநியோக முறை சிதம்பரநகர் அமைத்தல் தொடர்பில் ரூபா 980,390 செலவில் 11 நவம்பர் 2018 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை பாவனையிலீடுபடுத்தப்படாமல் உள்ளது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (இ) | மீள்குடியேற்ற அமைச்சின் அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் சபையால் மேற்கொள்ளப்பட்ட நீர்தொட்டி விநியோக முறை ஆசிகுளம் அமைத்தல் வேலை ரூபா 1,883,353 செலவில் 11 நவம்பர் 2018 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை பாவனையிலீடுபடுத்தப்படாமல் உள்ளது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

**3.6 பெறுகை**

-------------

**3.6.1 பெறுகைத்திட்டம்**

----------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டி 2.6.1 க்கு முரணாக தொழில்நுட்ப குழு பரிசீலனை செய்து அங்கீகரிக்கப்படாமல் ரூபா 2,761,920 பெறுமதியான 25 பொருட்கள் சேவைகள் சபையால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கமைய செயற்பட வேண்டும் | இனிவரும் காலங்களில் கொள்வனவு செய்யும் பொருட்கள் அனைத்திற்கும் தொழில்நுட்ப பரிசீலனை அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டின் ரூபா 1,739,752 தொகையான 15 பொருட்கள் சேவைகள் சபையால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) நிதி, திட்டமிடல் அமைச்சினால் 2012.01.05 திகதியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை 01/2012 க்கு முரணாக மீளாய்வாண்டில் சபையினால் 35 ஒப்பந்த வேலைகளின் கூட்டுமொத்தம் ரூபா 22,767,279 சனசமூக நிலையங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு செய்யப்பட்டிருந்தது. இவை தொடர்பான அவதானிப்புகள் வருமாறு. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் படி திணைக்கள தலைவர் மற்றும் இரண்டு பிரதிநிதிகளுடன் மூன்று பேர் கொண்ட குழுவொன்று 3.2 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட தகைமைகளை பரிசோதிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும் | சனசமூக நிலையங்களிற்கு ஒப்பந்தங்களை வழங்கும்போது பிரதேச சபைத் தலைவர், செயலாளர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் உள்ளடங்கிய குழுவானது தகைமைகளைப் பரிசோதிக்க நியமிக்கப்பட்டுள்ளது. விசேடமாக ஒப்பந்தம் செய்வதற்கான இயலுமை தொடர்பான சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசு பெறப்படுவதுடன் அதன் பின்னரே ஒப்பந்தங்கள் சனசமூக நிலையங்களிற்கு வழங்கப்படுகின்றது. |
| (ii) | சுற்றறிக்கையின் 3.2(iv) ஆம் பிரிவிற்கு முரணாக குறித்த ஒப்பந்த வேலைகள் சனசமூக நிலையங்களால் செய்யப்படாமல் வேறு தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டு 5% தரகு பணத்தை மாத்திரமே சனசமூக நிலையங்கள் பெற்றுக்கொண்டிருந்தது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்க மைய செயற்பட வேண்டும் | குறித்த விடயம் தொடர்பாக இனிவருங் காலங்களில் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (iii) | சுற்றறிக்கையின் 3.2(iv) ஆம் பிரிவிற்கு அமைய துணை ஒப்பந்தங்களில் ஈடுபட்ட அவ்வாறான சனசமூக நிலையங்களுக்கு கறுப்பு பட்டியலிடப்பட சபையானது இவ்வறிக்கை திகதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்க மைய செயற்பட வேண்டும் | இனிவருங் காலங்களில் குறித்தவிடயம் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறின் அவை தொடர்பாக ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iv) | சபையினால் மீளாய்வாண்டுக்கு செய்யப்பட வேண்டும் என பாதீடப்பட்ட 10 ஒப்பந்த வேலைகளும் செய்யப்படாமல் முற்றாக கைவிடப்பட்டிருந்தது | பாதிடப்பட்ட வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | சபை நிதி பற்றாக்குறை காரணமாக செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ளன. |
| (v) | சபையினால் மீளாய்வாண்டுக்கு செய்யப்பட வேண்டும் | பாதீட்டு தயாரிக்கப்படும் போது தொகை | செலவினத் தலைப்பில் வேலைகளுக்கான தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் |

| | | |
|---|---|---|
| என பாதீடப்பட்ட 11 ஒப்பந்த வேலைகளுக்கு பாதீடு தயாரிக்கும் போது தொகை குறிப்பிடப்படாமல் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்டு தயாரிக்கப்பட வேண்டும். | மீள்செப்பனிடல் வேலைகளுக்கான விபரத்தில் தவறுதலாக தொகை குறிப்பிடப்படவில்லை |
| (ஆ) சபையினால் மீளாய்வாண்டுக்கு செய்யப்பட வேண்டும் என பாதீடப்பட்ட வேலங்குளம் சின்னத்தம்பனை வீதி கல்லிட்டு தாரிடல் ஒப்பந்த வேலையானது சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின்கீழ் அக்ஷவி நிர்மாணத்தினரால் ரூபா 909,153 செலவில் 21 மார்ச் 2018 ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும் குறித்த வேலையானது செய்யப்படாமல் முற்றாக கைவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக குறித்த நிர்மாணத்தினருக்கு எதிராக சபை எவ்வித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும் | கறுப்புப் பட்டியலில் குறித்த ஒப்பந்தகாரரை சேர்ப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையே பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே ரூபா 2,999 தொடக்கம் ரூபா 5,414,026 வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |